# கனடாவின் ராஜதந்திர தொடர்புக்கு இந்தியாவின் பதில்

அக்டோபர் 14, 2024

இந்திய உயர் ஆணையர் மற்றும் இதர தூதர்கள் அந்நாட்டில் விசாரணை நடத்துவது தொடர்பான விவகாரத்தில் 'சம்பந்தப்பட்ட நபர்கள்' (persons of interest) என்று குறிப்பிடும் தூதரக தகவல் கனடாவிலிருந்து நேற்று எங்களுக்கு கிடைத்தது. இந்த போலித்தனமான குற்றச்சாட்டுகளை இந்திய அரசு வலுவாக நிராகரிப்பதோடு வாக்கு வங்கி அரசியலை மையமாகக் கொண்ட ட்ரூடோ அரசின் அரசியல் நிகழ்ச்சி நிரல் என்றும் குற்றம் சுமத்துகிறது.

பிரதம மந்திரி ட்ரூடோ செப்டம்பர் 2023-ல் சில குற்றச்சாட்டுகளை முன்வைத்ததிலிருந்து, எங்கள் தரப்பிலிருந்து பல முறை கோரிக்கை வைத்தபோதிலும், இந்திய அரசிடம் எந்த ஒரு சிறிய ஆதாரத்தையும் கனட அரசு பகிர்ந்து கொள்ளவில்லை. எந்தவித உண்மைகளும் இல்லாத உத்தரவாதங்களே பல தொடர்புகளுக்குப் பிந்தைய சமீபத்திய நடவடிக்கைகளிலும் உள்ளன. விசாரணை என்ற சாக்குப்போக்கில், அரசியல் ஆதாயங்களுக்காக இந்தியாவை கொச்சைப்படுத்தும் திட்டமிட்ட உத்தி உள்ளது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இந்தியா மீதான பிரதமர் ட்ரூடோவின் விரோதம் நீண்ட காலமாகவே சான்றாக உள்ளது. 2018-ல், தன்னுடைய வாக்கு வங்கியின் ஆதரவைப் பெறுவதற்காக அவர் மேற்கொண்ட இந்தியப் பயணம், அவருக்குப் பாதிப்பாகவே மாறியது. அவரது அமைச்சரவையில் இந்தியா தொடர்பான தீவிரவாத மற்றும் பிரிவினைவாத நோக்குடன் வெளிப்படையாகவே தொடர்பிலுள்ள நபர்கள் இடம்பெற்றுள்ளனர். 2020 டிசம்பரில் இந்திய உள்நாட்டு அரசியலில் அவர் வெளிப்படையாகவே தலையிட்ட விதம், இந்த விஷயத்தில் அவர் எவ்வளவு தூரத்திற்கும் செல்ல தயாராக இருந்தார் என்பதைக் காட்டுகிறது. எந்த ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்து அவரது அரசாங்கம் இருந்ததோ, அதன் தலைவர் இந்தியாவுக்கு எதிரான பிரிவினைவாத சித்தாந்தத்தை வெளிப்படையாக ஆதரிப்பதே இந்த விஷயங்களை மோசமாக்கியது. கனட அரசியலில் அன்னிய தலையீடுகள் பற்றிக் கண்டுகொள்ளாதிருப்பது பற்றிய விமர்சனம் வந்த நிலையில், தனக்கு ஏற்பட்ட அந்தச் சேதாரத்தைக் குறைக்கும் நோக்கில் அவருடைய அரசு இந்தியாவை இதில் இழுத்து விட்டிருக்கிறது. இதே திசையில் இப்போது எடுக்கப்பட்டுள்ள அடுத்த

நடவடிக்கைதான் சமீபத்தில் இந்திய தூதர்களை இலக்காக்குவது. பிரதம மந்திரி ட்ரூடோ வெளிநாட்டு தலையீடு தொடர்பான ஆணையத்தின் முன் ஆஜராகும்படி கூறப்படுவதால் இது தற்செயல் நிகழ்வு அல்ல. குறுகிய அரசியல் ஆதாயங்களுக்காக ட்ரூடோ அரசாங்கம் தொடர்ந்து பாடுபட்டு வரும் இந்திய-விரோத பிரிவினைவாத திட்டங்களுக்கும் இது உதவுகிறது.

அதற்காக, கனடாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் மற்றும் சமூகத் தலைவர்களை துன்புறுத்தவும், அச்சுறுத்தவும் மற்றும் மிரட்டவும் மோசமான தீவிரவாதிகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் ட்ரூடோ அரசாங்கம் தெரிந்தே இடம் அளித்துள்ளது. இதில் அவர்களுக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதும் அடங்கும். பேச்சுரிமையின் பெயரில் இத்தகைய எல்லா நடவடிக்கைகளும் நியாப்படுத்தப்படுகின்றன. சட்டவிரோதமாக கனடாவிற்குள் நுழைந்த சில நபர்கள் குடியுரிமைக்காக விரைவாக கண்காணிக்கப்பட்டுள்ளனர். கனடாவில் வாழும் பயங்கரவாதிகள் மற்றும் முறைப்படுத்தப்பட்ட குற்றத் தலைவர்கள் தொடர்பாக இந்திய அரசிடமிருந்து பலமுறை அவர்களை ஒப்படைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் மூத்த தூதராக 36 ஆண்டு அனுபவமும் தனது பணியில் தனித்த புகழையும் பெற்ற உயர் ஆணையர் சஞ்சய் குமார் வர்மா அவர்களே இருக்கிறார். அவர் ஜப்பான் மற்றும் சூடானில் தூதராக பணியாற்றியிருப்பதோடு, இத்தாலி, துருக்கி, வியட்நாம் மற்றும் சீனாவிலும் பணியாற்றியிருக்கிறார். கனடா அரசு அவர் மீது வைக்கும் அவதூறுகள் கேலிக்குரியவை மட்டுமல்ல அவமதிப்புக்கும் தகுதியானவை.

தற்போதைய ஆட்சியின் அரசியல் திட்டங்களுக்கு சேவை செய்யும் இந்தியாவில் உள்ள கனடா உயர் தூதரக அதகாரிகளின் செயற்பாடுகளை இந்திய அரசாங்கம் கவனத்தில் கொண்டுள்ளது. இது தூதரக பிரதிநிதித்துவம் தொடர்பான பரஸ்பர கொள்கையை நடைமுறைப்படுத்த வழிவகுத்தது. இந்திய தூதரக அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை வேண்டுமென்றே சுமத்திய கனடா அரசின் இந்த சமீபத்திய முயற்சிகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் மேலும் நடவடிக்கைகளை எடுக்க இந்தியாவிற்கு இப்போது உரிமை உள்ளது.

**புது டெல்லி**
**அக்டோபர் 14, 2024**